<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 158/2019**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய செல்வகுமார் **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 25.08.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | செல்வகுமார் | | |
| Father /Husband Name : | கணபதி | Court : | |
| Village : | மேலப்பெரும்பள்ளம் | Taluk : | |
| Calling : | | | |
| Age : | 53/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் 3 ம் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | 22.04.2002 | தங்கவேல் என்பவர் 1 ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 01.08.1991 | 2 ம் வாதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | 20.03.2015 | தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழின் அசல் **வாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 11.11.2009 | 1 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் சான்றிட்ட |

| | | |
|---|---|---|
| | | நகல் **வாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.